EalingHELP*('ஈலிங் உதவி')* இணைய தளத்திற்கு உங்களை வரவேற்கிறோம். இந்த இணைய தளம், ஈலிங் நகர்ப் பகுதிக்குள் வாழும் குறைபாடுள்ள குழந்தைகளுக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து சேவைப் பணிகள் குறித்த தகவல்களைத் தருவதற்கென உருவாக்கப் பட்டுள்ளது.

இந்த தளத்தில் நீங்கள் சேவைப் பணிகளை எங்கு பெறலாம் மற்றும் உங்களை அவர்களிடத்தில் எப்படி எடுத்துச் சொல்லலாம் என்பது குறித்த தகவல்கள் உள்ளன. கீழ்க்காணும் பிரிவுகள் குறித்த தகவல்களும் உள்ளன:

- உடல் நலம்
- கல்வி
- சமுதாயப் பணிகள்
- பயன்கள் & நிதி உதவி
- போக்குவரத்து
- ஓய்வு
- உள்ளூர் உதவி ஆதாரப் பணிகள்
- சட்டங்களும் கொள்கைகளும்
- செய்திகள் & நிகழ்வுகள்
- நிவர்த்தி செய்திடும் சிகிச்சைகள்

இங்கு செய்திக் கடிதங்களும் உள்ளன; இவற்றில் காணப்படும் கலந்துரையாடல்களில் நீங்கள் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம். மேலும் இதில் தொடர்பு கொள்வதற்கென ஒரு பிரிவு உள்ளது. இதில் பிற உள்ளூர் மற்றும் தேசிய அளவிலான பணிகள் எங்கு கிடைக்கும் என்ற தகவல்கள் கிடைக்கின்றன.

இந்த தளத்தின் தகவல்கள் ஆங்கிலத்தில் உள்ளன. உங்களுக்கு ஆங்கிலத்தில் உள்ளதை அறிவதில் சிரமம் இருந்தால் ஆங்கிலம் அறிந்த உங்கள் குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரிடம் உதவியை நாடவும்; அல்லது எங்களுடைய ஹோம் பேஜில் மேலாக 'contact us' என்ற பிரிவில் கிளிக் செய்வதன் மூலம் எங்கள் இணைய தள நிர்வாகியைத் தொடர்பு கொள்ளவும். அவர் உங்களுக்கு ஆதரவு தரக்கூடிய நபர் வசம் உங்களைத் தொடர்பு கொள்ளச் செய்வதில் அவரால் இயன்ற அனைத்தும் செய்திடுவார்.